Q.C.007

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Subordinate Accounts Services Examinations - Paper - IV (Fundamental Rules, Pension Rules and other applicable rules and codes) (With Books) | 114 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
  வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. The surrender Leave salary should have been Calculated at the rate of
ஒப்படைப்பு ஊதியம் கணக்கிடும் வீதம்

(A) 1/30
(B) 1/29
(C) 1/28
(D) 1/31

2. Select the interest Free Advance from the following
கீழ்க்காணும் இனங்களில் வட்டியில்லா முன்பணத்தை தேர்ந்தெடுக்கவும்

(A) Conveyance Advance
ஊர்தி முன்பணம்
(B) Computer Advance
கணிணி முன்பணம்
(C) Warm clothing Advance
வெப்ப உடை முன்பணம்
(D) Advance on Transfer
மாறுதல் முன்பணம்

3. One Additional increment shall be granted Bonus increment as per G.O.M.S. No.303/Finance (pay cell) Department / dated: 11.10.2017 for those completed the continuous service of years in the same post
அரசாணை எண். 303/நிதி (ஊ.குழு.த்துறை நாள்.11.10.2017ன் படி ஒரே பதவியில் __________ ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிபவர்களுக்கு ஒரு கூடுதல் ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

(A) 10
(B) 30
(C) 20
(D) 15

4. As per the Tamilnadu Revised pay rules 2017 the revised Adhoc increase to the employees drawing above Rs.2500/- per month on consolidated pay/fixed pay/ Honorarium on 01.10.2017 for employees on time scale of pay and employees on Special Time of Scale of pay is
தமிழ்நாடு திருத்திய ஊதிய விகித விதிகள் 2017ன் படி, ஒட்டுமொத்த ஊதியம் / நிர்ணயிக்கப்பட்ட ஊதியம்/மதிப்பூதியம் ரூ.2500/-க்கு மேல் பெறும் பணியாளர்களுக்கு 01.10.2017ல் திருத்திய இடைக்கால ஊதிய உயர்வு

(A) Rs.75/-
ரூ.75/-
(B) Rs.50/-
ரூ.50/-
(C) Rs.100/-
ரூ.100/-
(D) Rs.150/-
ரூ.150/-

5. Mention the revised Monthly ceiling limit on Travelling Allowance from 01.10.2017 to those who claimed 10% of basic pay before 01.10.2017

01.10.2017க்கு முன்னர் மாதாந்திர அடிப்படை ஊதியத்தில் 10% பயணப்படி பெற்றவருக்கு 01.10.2017 முதல் அனுமதிக்கப்படும் மாதாந்திர பயணப்படியை குறிப்பிடுக

(A) 8%
(B) 5%
(C) 6%
(D) 7%

6. What will be the Quantum of Medical allowance allowed on the Pensioners from 01.10.2017?

01.10.2017 முதல் ஓய்வூதியதாரருக்கு அனுமதிக்கப்படும் மருத்துவப்படி எவ்வளவு?

(A) Rs.100/-
ரூ.100/-
(B) Rs.200/-
ரூ.200/-
(C) Rs.150/-
ரூ.150/-
(D) Rs.300/-
ரூ.300/-

7. Additional change allowance paid if worked minimum of

கூடுதல் பொறுப்பு படி பெற பணியாற்றிய வேண்டிய குறைந்தபட்ச காலம்?

(A) 50 days
50 நாட்கள்
(B) 25 days
25 நாட்கள்
(C) 60 days
60 நாட்கள்
(D) 39 days
39 நாட்கள்

8. The deduction should not be made in the subsistence allowance from the following shall be

பிழைப்பூதியம் வழங்கும் நிலையில் பிடித்தம் செய்யக் கூடாத இனங்களை கீழ்க்காணும் இனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

(A) Income Tax
வருமான வரி
(B) Co–operative loan
கூட்டுறவு சங்க கடன்
(C) GPF subscription
சேம நல நிதி சந்தா
(D) GPF Loan Refund
சேம நல நிதி முன்பணம்

9. In the Festival advance comes in the month of April, the Festival Advance should be paid before
ஏப்ரல் மாதத்தில் பண்டிகை வருமாயின் பண்டிகை முன்பணம் முன்னால் வழங்கப்படும் மாதம்

(A) 1 Month
ஒரு மாதம்

(B) 2 Months
2 மாதங்கள்

(C) 3 Months
3 மாதங்கள்

(D) Month of March
மார்ச் மாதத்தில்

10. Find out wrong pair
தவறான ஜோடியைக்கண்டு பிடிக்கவும்.

(A) Probation period–2 years
தகுதி காண் பருவம் -2 ஆண்டுகள்

(B) Selection Grade 10 years
தேர்வுநிலை - 10 ஆண்டுகள்

(C) Special grade 20 years
சிறப்புநிலை - 20ஆண்டுகள்

(D) Bonus increment - 25 years
போனஸ் ஊதிய உயர்வு - 25 ஆண்டுகள்

11. Casual leave can be combined with
தற்செயல் விடுப்புடன் உடன் இணைத்து துய்க்கும் விடுப்பு

(A) Earned Leave
ஈட்டிய விடுப்பு

(B) Medical Leave
மருத்துவ விடுப்பு

(C) Compensatory leave
ஈடு செய்யும் விடுப்பு

(D) UEL on PA
சொந்த காரணங்களின் பேரிலான ஈட்டா விடுப்பு

12. An Inspector of L.F. audit who is working in Salem now Transferred to another Office in Salem itself which is having the distance of 10 km what will be joining time allowed to him

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் ஆய்வளராக சேலத்தில் பணிபுரியும் அலுவலருக்கு அதே ஊரில் 10 கி.மீ. தொலைவில் உள்ள மற்றொரு அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அன்னாருக்கு அனுமதிக்கப்படும் பணியேற்பிடைக்காலம் எவ்வளவு?

(A) 6 days
6 நாட்கள்

(B) 1 day
1 நாள்

(C) 7 days
7 நாட்கள்

(D) No joining time
பணியேற்பிடைக்காலம் இல்லை

13. Tamilnadu Pension Rule 1978 came into force w.e.f.

தமிழ்நாடு ஓய்வூதிய வழி 1978 நடைமுறைப்படுத்தப்பட்டது

(A) 1.1.1978

(B) 1.4.1978

(C) 1.1.1979

(D) 1.4.1979

14. Regulation of pay is case of re-employment of Government pensioner comes under pension of rule.

ஓய்வூதியம் பெற்று வரும் ஒரு அரசு ஓய்வூதியதாரருக்கு மீண்டும் பணி அமர்த்தும் போது ஓய்வூதிய விதி __________ இன் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(A) 44

(B) 46

(C) 48

(D) 49

15. The increase of Daily Allowance on Tour eligible for a Grade II Government employee for official halt at Valparai

வால்பாறையில் அலுவலகப் பணியின் பொருட்டு இரவு தங்கும் ஒரு இரண்டாம் நிலை அலுவலர் கூடுதலாகப் பெறும் தினப்படி சதவீதம்

(A) 25%

(B) 75%

(C) 30%

(D) 50%

16. Minimum Net qualifying service required for retirement gratuity
ஓய்வூதிய பணிக்கொடைக்கு தேவையான குறைந்த பட்ச நிகர தகுதிப் பணிக்காலம்?

(A) 10 years
10 ஆண்டுகள்

(B) 5 years
5 ஆண்டுகள்

(C) 7 years
7 ஆண்டுகள்

(D) 20 years
20 ஆண்டுகள்

17. "Compulsory Wait" is being Governed under
"கட்டாயக் காத்திருப்பு" கீழே குறிப்பிட்ட விதிகள் தொடர்புடையது

(A) Rule 9 (6) (b) of FR
அடிப்படை விதி 9 (6) (b)

(B) Rule 8 of Tamilnadu Government servants Conduct Rule 1973
விதி 8 தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தை விதிகள் 1973

(C) FR 49
அடிப்படை விதி 49

(D) Pension Rule 18
ஓய்வூதிய விதி 18

18. Appropriation lapses at the close of
ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு கீழே குறிப்பிட்ட காலத்திற்குள் காலாவதி ஆகி விடும்

(A) Calendar year
காலண்டர் ஆண்டு

(B) Financial Year
நிதியாண்டு

(C) 30th June
ஜீன் 30

(D) 31st December
டிசம்பர் 31

19. The Authority competent to sanction study leave
கல்வி விடுப்புக்கு அனுமதி அளிக்கும் தகுதியான அலுவலர்

(A) Next immediate superior
அடுத்த உயர் அலுவலர்

(B) Head of office
அலுவலகத் தலைவர்

(C) Government
அரசு

(D) Appointing Authority
நியமன அலுவலர்

20. The Assessment of date of Birth based on M C by which the year alone is given, the date of birth shall be taken as:
மருத்துவச் சான்றிதழ் அடிப்படையில் பிறந்த தேதி நிர்ணயம் செய்யப்பட்டதில் ஆண்டு மட்டும் குறிப்பிட்டிருந்தால், அந்த ஆண்டில் பிறந்த தேதியாக எடுத்துக்கொள்ளும் நாள்.

(A) 1st June of that year
ஜீன் முதல் தேதி

(B) 1st July of that year
ஜீலை முதல் தேதி

(C) 1st April of that year
ஏப்ரல் முதல் தேதி

(D) 1st January of that year
ஜனவரி முதல் தேதி

21. A Govt Servant in his pension how much share will be commuted
ஒருவர் ஓய்வூதியத்தில் அதிகபட்சம் எத்தனை பங்கு அரசுக்கு ஒப்படைத்து தொகை பெறலாம்?

(A) ½ share
1/2 பங்கு

(B) ¼ share
1/4 பங்கு

(C) 1/10 share
1/10 பங்கு

(D) 1/3 share
1/3 பங்கு

22. The Government Servant on superior Service has completed 10 years of service is eligible for UEL on MC for
10 ஆண்டுகள் பணி முடித்த உயர்நிலை அரசுப் பணியாளருக்கு தகுதியான மருத்துவச் சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பு நாட்கள்

(A) 180 days
180 நாட்கள்

(B) 270 days
270 நாட்கள்

(C) 240 days
240 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

23. The minimum enhanced Family Pension disbursed from 01.10.2017 should be
01.10.2017 முதல் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும் தொகை

(A) Rs.3,050/-
ரூ.3,050/-

(B) Rs.5,780/-
ரூ.5,780/-

(C) Rs.7,850/-
ரூ.7,850/-

(D) Rs.8,750/-
ரூ.8,750/-

24. Mention the rate for payment of monthly emolument of Death Gratuity for those having the length of service 11 years or more but less than 20 years
11 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை பணிபுரிந்து இறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு இறப்பு பணிக்கொடையாக எத்தனை மாதங்களுக்கான மொத்த தொகை வழங்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடவும்

(A) 12 times
12 மடங்கு

(B) 15 times
15 மடங்கு

(C) 6 times
6 மடங்கு

(D) 10 times
10 மடங்கு

25. What will be the special pay of Junior Assistant Cum Typist (Typing both higher in English and Tamil) from 01.10.2017 in urban Local bodies?
01.10.2017 முதல் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சருக்கு சிறப்பூதியமாக வழங்கப்படும் தொகை எவ்வளவு ?

(A) Rs.240/-
ரூ.240/-

(B) Rs.180/-
ரூ. 180/-

(C) Rs.150/-
ரூ.150/-

(D) Rs.230/-
ரூ.230/-

26. Mention the Special pay allowed from 01.10.2017 to Duffadar of the corporation Commissioner
01.10.2017 முதல் மாநகராட்சி ஆணையரின் தபேதாருக்கு வழங்கப்படும் சிறப்பூதியதைக் குறிப்பிடுக

(A) Rs. 120/-
ரூ.120/-

(B) Rs. 180/-
ரூ.180/-

(C) Rs. 230/-
ரூ.230/-

(D) Rs. 160/-
ரூ.160/-

27. Mention the maximum ceiling limit/ per month of Hill Allowance in Ooty from 01.10.2017
01.10.2017 முதல் ஊட்டிக்கான உயர்ந்தபட்ச மலை வாழ் படியினைக் குறிப்பிடுக

(A) Rs.5,000/-
ரூ.5,000/-

(B) Rs.6,000/-
ரூ.6,000/-

(C) Rs.3,000/-
ரூ.3,000/-

(D) Rs.8,000/-
ரூ.8,000/-

28. What will be the supervisory Allowance to be paid from 01.10.2017 for Assistant who are supervising 3 Junior Assistant?
1.10.2017 முதல் மூன்று இளநிலை உதவியாளர்களை மேற்பார்வை செய்யும் உதவியாளருக்கு வழங்கப்படும் மேற்பார்வைக் கட்டணம் எவ்வளவு?

(A) Rs.80/-
ரூ.80/-

(B) Rs.60/-
ரூ.60/-

(C) Rs.50/-
ரூ.50/-

(D) Rs.100/-
ரூ.100/-

29. Eligibility of UEL on MC to the probationers in Basic service
அடிப்படையில் பணியில் உள்ள தகுதிகாண் பருவத்தினருக்கான தகுதியான மருத்துவ விடுப்பு

(A) 90 days
90 நாட்கள்

(B) 10 days for every completed year
முடிந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் 10 நாட்கள்

(C) 180 days
180 நாட்கள்

(D) Not Eligible
தகுதி இல்லை

30. Choose the correct statement:
சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்

(A) Apprentice Service Count for pension
பயிற்சி பருவக்காலம் ஓய்வூதியத்திற்கு சேரும்

(B) Boy's service count for pension
குழந்தைப் பருவ பணிக் காலம் ஓய்வூதியத்திற்கு சேரும்

(C) Foreign service count for pension
அயற்பணிக்காலம் ஓய்வூதியத்திற்கு சேரும்

(D) Breaking service count for pension
பணி முறிவு காலம் ஓய்வூதியத்திற்கு சேரும்

31. Mention the Percentage of Probable expenditure to be granted as advance on Tour Travelling Allowance

சுற்றுப் பயணப்படி இனத்தில் முன்பணமாக உத்தேச செலவினத்தில் எத்தனை சதவீதம் பெறலாம்?

(A) 75% (B) 50%

(C) 60% (D) 90%

32. How Many years of Service should be completed by a Government servant to get HBA

வீடு கட்ட முன்பணம் கோரும் அரசு ஊழியர் எத்தனை ஆண்டுகள் முறையான பணி முடித்திருக்க வேண்டும்?

(A) 5 (B) 6

(C) 7 (D) 8

33. For the calculation of Joining time How many days to be allowed for 550 KM of rail Journey?

பணியிடைக்காலம் கணக்கிடுவதில் 550 கி.மீ. ரயில் பயணம் செய்ய எவ்வளவு நாட்கள் அனுமதிக்கப்படுகிறது

(A) 3 days
3 நாட்கள்

(B) 1 day
1 நாள்

(C) 2 ½ days
2 ½ நாட்கள்

(D) 2 days
2 நாட்கள்

34. The Date of birth of Group 'C' employee is 01.10.1979. His date of superannuation retirement will be

குரூப் 'C' பணியைச் சார்ந்த அரசுப் பணியாளரின் பிறந்த நாள் 01.10.1979 எனில் அன்னாரின் வயது முதிர்வு ஓய்வு நாள்

(A) 30.09.2039 (B) 31.10.2037

(C) 31.08.2038 (D) 30.09.2038

35. Net Qualifying service in Half years to get Full DCRG
முழு ஓய்வூதியம் பணிக்கொடை பெறுவதற்கு தேவைப்படும் தகுதியான அரையாண்டுகள்

(A) 60
(B) 68
(C) 66
(D) 58

36. Commutation value for a Government employee who retired on 60 years is
60 வயதில் ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கான ஓய்வூதியம் தொகுத்துப் பெறும் மதிப்பு

(A) 8.572
(B) 8.194
(C) 8.371
(D) 8.446

37. Extraordinary leave may be granted in special circumstances under
சிறப்பு தேர்வுகளில் அசாதாரண விடுப்பு இதன் படி வழங்கப்படுகிறது

(A) Fundamental Rule 85
அடிப்படை விதி 85
(B) Fundamental Rule 86
அடிப்படை விதி 86
(C) Fundamental Rule 87
அடிப்படை விதி 87
(D) Fundamental Rule 88
அடிப்படை விதி 88

38. What is the monthly ceiling on TA of an Assistant Director of Local fund Audit on or after 01.10.2017?
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் பணிபுரியும் உதவி இயக்குநருக்கு 01.10.2017 முதல் பயணப்பட்டியல் மாதாந்திர உச்ச வரம்பு எவ்வளவு?

(A) 8%
(B) 6%
(C) 7%
(D) 5%

39. What will be the maximum pay level (level 3) in the Tamilnadu revised pay Rules 2017?
தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன் படி, அதிகபட்ச ஊதிய லெவல் (லெவல் 3) என்ன?

(A) Rs.2,19,800/-
ரூ.2,19,800/-

(B) Rs.1,12,500/-
ரூ.1,12,500/-

(C) Rs.2,25,000/-
ரூ.2,25,000/-

(D) Rs.2,15,900/-
ரூ.2,15,900/-

40. Pension undrawn beyond _________ require Authorisation from Accountant General.
வழங்கப்படாத ஓய்வூதியம் ————— மிகைப்படும் போது மாநிலக் கணக்காயரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்

(A) 3 years
3 ஆண்டுகள்

(B) 2 years
2 ஆண்டுகள்

(C) 1 year
1 ஆண்டு

(D) 6 months
6 மாதங்கள்

41. Time limit for the submission of LTC claim to the office from the date of completion of return journey is
விடுப்புப் பயணச் சலுகை முடிவடைந்து திரும்பிய நாளிலிருந்து பயணப்பட்டியலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க கால அளவு

(A) 1 Month
ஒரு மாதம்

(B) 2 Months
இரு மாதங்கள்

(C) 3 Months
மூன்று மாதங்கள்

(D) 60 days
60 நாட்கள்

42. What will be the percentage of Dearness Allowance to be paid in the Leave salary of UEL on P.A?
சொந்த காரணங்களின் பேரிலான ஈட்டா விடுப்புக்கான விடுப்பூதியம் வழங்குகையில் அகவிலைப்படி வழங்கும் சதவீதம் எவ்வளவு?

(A) 100%

(B) 75%

(C) 50%

(D) 60%

43. If a Government servant did not shift any personal effects to the new station on Transfer the admissible lumpsum allowance should be
பணி மாறுதலில் புதிய இடத்திற்கு செல்லும் போது தனது சொந்த உடைமைகளை கொண்டு செல்லா விட்டால், அந்த அரசுப் பணியாளருக்கு அனுமதிக்கக் கூடிய ஒட்டு மொத்த தொகை அளவு

(A) 60%
(B) 50%
(C) 75%
(D) 30%

44. What will be the quantum of advance for the purchase of Kadhi cloth to the Government employee?
அரசு ஊழியருக்கு காதி முன்பணம் வழங்கும் கட்டுப்பாடு என்ன?

(A) 2 Months pay
2 மாத ஊதியம்
(B) Three months pay
மூன்று மாத ஊதியம்
(C) Maximum of Rs.10,000/-
உயர்ந்தபட்சம் ரூ.10,000/-
(D) One month basic pay
ஒரு மாத அடிப்படைச் சம்பளம்

45. Additional charge allowance to be paid as per fundamental Rule
கூடுதல் பொறுப்பு படி அடிப்படை விதி __________ இன் கீழ் வழங்கப்படுகிறது.

(A) 46
(B) 47
(C) 48
(D) 49

46. The EL calculation during the Re-employed period shall be
மறுபணிக்காலத்தில் ஈட்டிய விடுப்பு கணக்கிடும் வீதம்

(A) 2½ days for every completed 2 months
முடிவடைந்த இரண்டு மாதங்களுக்கு இரண்டரை நாட்கள்
(B) 15 days of advance credit
15 நாட்கள் முன் வைப்பு
(C) 30 days per year
ஆண்டுக்கு 30 நாட்கள்
(D) 2½ days per month
மாதத்திற்கு 2 ½ நாட்கள்

47. Find out the period to be counted for selection grade/special grade from the following
தேர்வு நிலை/சிறப்புநிலை கணக்கிட எடுத்துக் கொள்ளும் காலத்தை பின்வருவனவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும்

(A) Service in lower post
கீழ் பதவி பணிக்காலம்

(B) Reversion period
பதவி இறக்க காலம்

(C) EOL without MC
மருத்துவச் சான்றில்லாத அசாதாரண விடுப்பு

(D) Service in identical post
இணையான பதவியின் பணிக்காலம்

48. How much Daily allowance to be claim in T A bill by an officer who availed the free lodging only?
அலுவலர் ஒருவர் முகாமில் இலவச தங்கும் விடுதியில் தங்கும் நிலையில் பயணப்பட்டியலில் கோர வேண்டிய தினப்படி அளவு எவ்வளவு

(A) 1/4
(B) 3/4
(C) 1/2
(D) 60%

49. Mention the minimum age limit to proceed on Voluntary retirement.
தன் விருப்ப ஓய்வில் செல்ல குறைந்தபட்ச அளவு வயதினைக் குறிப்பிடுக.

(A) 53 years
53 அண்டுகள்

(B) 45 years
45 ஆண்டுகள்

(C) 50 years
50 ஆண்டுகள்

(D) 40 years
40 ஆண்டுகள்

50. Choose which one effects the promotion from the following.
கீழ்க்காணும் இனங்களில் பதவி உயர்வினைப் பாதிக்கும் இனத்தினைத் தேர்ந்தெடுக்கவும்

(A) Punishment is operative
தண்டனை நடப்பில் உள்ளது

(B) Warring
எச்சரிக்கை

(C) Detailed enquiry by DVAC
லஞ்ச ஒழிப்புத் துறையினரால் தீவிர விசாரணை

(D) Pending enquiry
விசாரணை நிலுவை

51. The concession given to the Blind and physically challenged employees to leave the office before
பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு அலுவலகத்தை விட்டு முன்னதாகச் செல்ல அனுமதிக்கப்பட்ட கால அளவு

(A) 30 minutes
30 நிமிடங்கள்

(B) 1 hour
ஒரு மணி நேரம்

(C) 10 minutes
10 நிமிடங்கள்

(D) 15 minutes
15 நிமிடங்கள்

52. Mention the percentage of Bill amount to be deducted in the medical reimbursement bill which was submitted after 3 months from the purchase of medicines
மருத்துவச் செலவு மீளப்பெறும் பட்டியல் மருந்து வாங்கியதிலிருந்து மூன்று மாதங்கள் கழித்துக் கோரினால் எத்தனை சதவீதத் தொகை கழிக்கப்பட வேண்டும்

(A) 10%

(B) 25%

(C) 15%

(D) 30%

53. Optional deduction from the Subsistance allowance
பிழைப்பூதியத்தில் விருப்பமான பிடித்தம் என்பது

(A) Income tax
வருமான வரி

(B) Refund of Advance from General provident fund
சேமநல நிதி முன்பணப்பிடித்தம்

(C) House Rent
வீட்டு வாடகை

(D) Court attachments
நீதிமன்ற பிடித்தம்

54. Special causal leave to be availed for sterilization for women government servant shall be
குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக பெண் அரசு ஊழியருக்கு அனுமதிக்கப்படும் சிறப்பு தற்செயல் விடுப்பு

(A) 8 days
8 நாட்கள்

(B) 7 days
7 நாட்கள்

(C) 10 days
10 நாட்கள்

(D) 20 days
20 நாட்கள்

55. How many days to be taken by an officer to refer the ML to the medical board from the Date of receipt of application?
மருத்துவ விடுப்பு விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் மருத்துவ விடுப்பு விண்ணப்பத்தை மருத்துவக் குழுவிற்கு அலுவலர் அனுப்புவார்

(A) 7

(B) 5

(C) 3

(D) 10

56. Special pay allowed from 01.10.2017 to the Driver under common category shall be
01.10.2017 முதல் பொதுப் பிரிவில் வரும் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் சிறப்பூதியத் தொகை

(A) Rs. 120/-
ரூ. 120/-

(B) Rs. 150/-
ரூ. 150/-

(C) Rs. 180/-
ரூ. 180/-

(D) Rs. 90/-
ரூ. 90/-

57. The following allowance / Relief is eligible during suspension period.
தற்காலிக பணி நீக்க காலத்தில் கீழ்கண்ட படி/நிவாரணம் கிடைக்கும்

(A) Cash allowance
ரொக்கப் படி

(B) Interim Relief
இடைக்கால நிவாரணம்

(C) Medical allowance
மருத்துவப் படி

(D) Dearness allowance
அகவிலைப் படி

58. Mention the age limit of children to claim 1/2 DA in T T A Bill
மாறுதல் பயணப்பட்டியலில் 1/2 தினப்படி எந்த வயதில் உள்ள குழந்தைகளுக்கு கோரலாமென்பதைக் குறிப்பிடுக.

(A) 14 years
14 ஆண்டுகள்

(B) 12 years
12 ஆண்டுகள்

(C) 10 years
10 ஆண்டுகள்

(D) 15 years
15 ஆண்டுகள்

59. What shall be the grade of employee who is drawing pay in pay level 13 and above but below pay level 25 for the revision of rates of TA from 01.10.2017?
01.10.2017 முதல் ஊதிய லெவல் 13 மற்றும் அதற்குமேல் மற்றும் ஊதியத் தொகை ஊதிய லெவல் 25 அதற்கு கீழ் பெறும் பணியாளருக்கு பயணப்பட்டியல் பெறும் பொருட்டு நிர்ணயிக்கப்பட்ட கிரேடு என்ன?

(A) Grade I(b)
கிரேடு I(b)

(B) Grade III
கிரேடு III

(C) Grade II
கிரேடு II

(D) Grade IV
கிரேடு IV

60. Mention the revised rate of Daily allowance per day to the grave IV employees who stayed in Hotel at Chennai on 17.01.2018 and relived on 19.01.2018.
17.01.2018 முதல் 19.01.2018 நாள் முடிய சென்னையில் ஹோட்டலில் தங்கியிருந்த கிரேடு IV பணியாளருக்கு வழங்கம் தங்கும் கட்டணத்திற்கான தினப்படியைக் குறிப்பிடுக

(A) Rs. 400/-
ரூ. 400/-

(B) Rs. 750/-
ரூ. 750/-

(C) Rs. 800/-
ரூ. 800/-

(D) Rs. 600/-
ரூ. 600/-

61. A married daughter of 23 years of age was ineligible to get compassionate Ground appointment
23 வயது முடித்த திருமணமான பெண் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற தகுதியற்றவராகிறார்

(A) Correct
சரி

(B) Considered for compassionate Ground Appointment
கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறலாம்

(C) Should not be married one
திருமணமாகதவராக இருத்தல் வேண்டும்

(D) Must attain the age of 25
25 வயது பூர்த்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்

62. Thirunangai/Aravani is not eligible for Family Pension
திருநங்கை / அரவாணி குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் அல்ல

(A) Correct
சரி

(B) Not treated as women child
பெண் குழந்தையாக கருதப்படமாட்டாது

(C) Eligible for Family Pension
குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்

(D) 25 years and above shall be eligible
25 வயது மற்றும் அதற்குமேல் உள்ளவராக இருத்தல் வேண்டும்

63. A competent Authority incurred an expenditure for Rs.50,000/- on 30.01.2017 expecting that he would get sufficient funds before 31.03.2017
உரிய அலுவலர் 31.03.2017 ல் தொகை வரும் என எதிர்நோக்கி, 30.01.2017ல் ரூ. 50,000/- செலவினம் மேற்கொண்டுள்ளார்

(A) Action is correct
செயல் சரியானதே

(B) Action is ratified by the immediate superior
செயலுக்கு அடுத்த நிலை அலுவலரின் தவிர்ப்பு பெறப்பட வேண்டும்

(C) Should incur expenditure, if sufficient funds are already received
ஏற்கனவே உரிய நிதி பெறப்பட்டிருந்தால் மட்டுமே செலவு செய்யலாம்

(D) He can incur expenditure in anticipation of provision of fund
நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி செலவு மேற்கொள்ளலாம்

64. A Treasury Officer admitted T A Bill of a subordinate Officer without Express Pay order
Express pay order இல்லாமல் ஒரு அலுவலரி பயணப்பட்டியல் உரிமை கோரிக்கையை கருவூல அதிகாரி அனுமதிக்கிறார்

(A) Correct
சரியே

(B) Express pay orders of H O D is required
துறைத் தலைவர் வழங்கும் Express pay order தேவை

(C) Requires AG authorisation
மாநிலக் கணக்காயரின் ஆணை தேவை

(D) Express pay order of the Govt is needed
அரசால் வழங்கும் Express pay order தேவை

65. The Major Head of Account denotes the function of the Government
பெருந்தலைப்பென்பது ஒரு துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை குறிப்பதாகும்

(A) Correct
சரியானது

(B) In Correct
தவறானது

(C) Respresent the purpose of Expenditure
செலவினத்தின் தன்மையைக் குறிப்பது

(D) Indicate the Budge Estimate
ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கத்தை குறிப்பதாகும்

66. An employee's suspension period was treated as penalty by the officer by which that the period was excluded in pension calculation
ஒரு அரசுப்பணியாளரின் தற்காலிக பணி நீக்க காலம் தண்டனையாக கருதப்பட்டால் அக்காலம் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு எடுத்துகொள்ளப்படவில்லை

(A) Count for pension
ஓய்வூதிய கணக்கீட்டிற்கு எடுத்துகொள்ளப்பட வேண்டும்

(B) Correct
கூற்று சரியே

(C) Duty period will count for pension
வேலை நாட்கள் மட்டுமே ஓய்வூதிய கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்

(D) Any lend of punishment was taken to calculate pension
அனைத்து தண்டனைகளும் ஓய்வூதிய கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளலாம்

67. An employee serviced for 7 years. The Administration refused to grant his pension
7 ஆண்டுகள் நிகர பணி முடித்தவருக்கு நிர்வாகம் ஓய்வூதியம் வழங்க மறுக்கிறது

(A) Eligible for pension
ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர்

(B) Eligible for Gratuity
பணிக்கொடைக்கு தகுதியானவர்

(C) H O D can grant the pension
துறைத் தலைவர் ஓய்வூதியம் அனுமதிக்கலாம்

(D) Action is correct
செயல் சரியானதே

68. Pay on promotion - The initial pay of Government employees is fixed under
பதவி உயர்வு பெறுபவரின் ஊதியம் கீழே குறிப்பிட்ட விதிகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது

(A) Article 52 of Tamilnadu Financial Code Vol-I
தமிழ்நாடு நிதித் துறை தொகுதி- I விதி 52

(B) FR 22 (B)
அடிப்படை விதி 22(ஆ)

(C) FR 24
அடிப்படை விதி 24

(D) Treasury Rule 16
கருவூல விதி 16

69. Additional Charge allowance to be allowed upto
கூடுதல் பொறுப்பு படி இதுவரை வழங்கலாம்

(A) 5 Months
5 மாதங்கள்

(B) No time limit
கால வரையரை இல்லை

(C) 1 Year
1 ஆண்டு

(D) 3 Years
3 ஆண்டுகள்

70. Which of the following period will not count for increment
கீழே குறிப்பிட்டவற்றில் ஊதிய உயர்விற்கு தகுதி பெறாத காலம் எது?

(A) Training Period
பயிற்சிக் காலம்

(B) Study Leave
உயர்கல்வி பயில விடுப்பு

(C) UEL on PA
சொந்தக் காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

(D) E.O.L. without M.C.
மருத்துவச் சான்றில்லாத அசாதாரண விடுப்பு

71. Study leave will not count for
உயர் கல்விக் காலம் கீழே குறிப்பிட்டுள்ளதில் எதற்கு சேராது

(A) Leave
விடுப்பு

(B) Promotion
பதவி உயர்வு

(C) Pension
ஓய்வூதியம்

(D) Seniority
முதுநிலை

72. An employee of Tamilnadu Government completed __________ years of net qualifying service may apply for VRS
தமிழ்நாடு அரசு பணியாளர் __________ ஆண்டுகள் நிகர பணிக்காலம் முடித்திருந்தால் தன் விருப்ப ஓய்விற்கு விண்ணப்பிக்கலாம்

(A) 10

(B) 13

(C) 20

(D) 15

73. Maternity leave shall be granted to a Government employee with less than
மகப்பேறு விடுப்பு கோரி விண்ணப்பம் செய்பவருக்கு எத்தனை குழந்தைகளுக்கு கீழே இருக்க வேண்டும்

(A) Three living children
உயிருடன் மூன்று குழந்தைகள்

(B) Four living children
உயிருடன் நான்கு குழந்தைகள்

(C) One living children
உயிருடன் ஒரு குழந்தை

(D) Two living children
உயிருடன் இரண்டு குழந்தைகள்

74. In cases including change of station, the joining time allowed subject to a maximum of __________ days

இட மாறுதலில் செல்பவருக்கு அதிகபட்சமாக வழங்கப்படும் பணியேற்பிடைக் காலம் எவ்வளவு?

(A) 6
(B) 7
(C) 15
(D) 30

75. How many years shall be sanctioned as initial period to foreign Service

அயற்பணியில் ஒரே நேரத்தில் எத்தனை ஆண்டுகள் பணிபுரிய ஆணையிடலாம்

(A) 3
(B) 5
(C) 4
(D) 6

76. Article 239 of Tamil Nadu Financial code Volume I deals with

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1ல் ஆர்ட்டிக்கிள் 239 எதைப் பற்றி விவாதிக்கிறது?

(A) Refund of Revenue
வருவாய் திருப்புதல்

(B) Grant of pay and TTA Advance on Transfer
இடமாறுதலில் ஊதியம் மற்றும் இடமாறுதல் முன்பணம் வழங்குதல்

(C) Insurance of Government policy
அரசு சொத்துக்களை காப்பீடு செய்வது

(D) Arrear Claim
ஊதிய நிலுவை வழங்குதல்

77. Advances to be adjusted within a period of

முன்பணங்கள் இந்த காலத்திற்குள் சரிகட்டப்பட வேண்டும்

(A) 1 Month
1 மாதம்

(B) 6 Months
6 மாதங்கள்

(C) 2 Months
2 மாதங்கள்

(D) 3 Months
3 மாதங்கள்

78. No Claim for T A, will be entertained if the claim is made after __________ Months from the date of completion of Journey

பயணம் முடிவடைந்த நாளிலிருந்து __________ மாதங்களுக்குள் பயணப்பட்டியல் கோரப்படாவிட்டால், பயணப்பட்டியல் அனுமதிக்கக் கூடாது

(A) One Month
ஒரு மாதம்

(B) Three Months
3 மாதங்கள்

(C) $31^{st}$ March
31 மார்ச்

(D) Six Months
6 மாதங்கள்

79. The Method of work done by the Department concerned by engaging labourers is called

வேலையாட்களை பணியமரத்தி துறை மூலம் செய்யப்படும் பணிகளை கீழ்க்காணுமாறு குறிப்பிடுவர்

(A) Departmental Method
துறைப் பணி

(B) Price work contract method
சிறுவேலை ஒப்பந்தப் பணி

(C) Lumsum contract method
ஒட்டுமொத்த ஒப்பந்தப் பணி

(D) Schedule contract Method
செந்தூர ஒப்பந்தப் பணி

80. An employee under suspension is eligible for subsistence Allowance at an amount equal to

தற்காலிக பணி நீக்கத்திலிருப்பவர் பிழைப்பூதியமாக கடைசியாக பெற்ற ஊதியத்தில் பெறக் கூடிய தொகை

(A) 25% of Basic Pay
அடிப்படை ஊதியத்தில் 25%

(B) 50% of Basic Pay
அடிப்படை ஊதியத்தில் 50%

(C) 75% of Basic Pay
அடிப்படை ஊதியத்தில் 75%

(D) 33% of Basic Pay
அடிப்படை ஊதியத்தில் 33%

81. What will be the time interval between One Foreign Service to Another
ஒரு அயற்பணி முடித்து அடுத்த அயற்பணி செல்ல உள்ள கால இடைவெளி என்ன?

(A) 1 Year
ஒரு வருடம்

(B) 2 Years
2 வருடங்கள்

(C) 3 Years
3 வருடங்கள்

(D) 6 Months
6 மாதங்கள்

82. How many days shall be taken as Medical leave at a one time?
ஒரேநேரத்தில் தொடர்ச்சியாக மருத்துவ விடுப்பு எத்தனை கால அளவிற்கு எடுக்கலாம்?

(A) 6 Months
6 மாதங்கள்

(B) 1 Year
ஒரு வருடம்

(C) 2 Years
2 வருடங்கள்

(D) 3 Months
3 மாதங்கள்

83. Mention the period of Medical leave which will be referred to Medical board?
எவ்வளவு நாட்களுக்கு மேற்பட்ட மருத்துவ விடுப்பு விண்ணப்பத்தை மருத்தவ குழுவிற்கு அனுப்பலாமென்பதைக் குறிப்பிடுக.

(A) 65 days and above
65 நாட்கள் மற்றும் அதற்கு மேல்

(B) 61 days and above
61 நாட்கள் மற்றும் அதற்கு மேல்

(C) 60 days and above
60 நாட்கள் மற்றும் அதற்கு மேல்

(D) 70 days and above
70 நாட்கள் மற்றும் அதற்கு மேல்

84. Leave Cannot be claimed as of right
விடுப்பினை ஒரு உரிமையாக கோரமுடியாது

(A) Fundamental Rule 66
அடிப்படை விதி 66

(B) Fundamental Rule 60
அடிப்படை வழி 60

(C) Fundamental Rule 67
அடிப்படை வழி 67

(D) Fundamental Rule 68
அடிப்படை விதி 68

85. Lumsum amount payable in case of death of Government servant under Family Security Fund Scheme while in service is
குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும் போது இறந்த அரசுப் பணியாளருக்கு வழங்கும் ஒட்டு மொத்த தொகை

(A) Rs. 1.5 Lakhs
ரூ. 1.5 இலட்சம்

(B) Rs. 5.00 Lakhs
ரூ. 5.00 இலட்சம்

(C) Rs. 3.00 Lakhs
ரூ. 3.00 இலட்சம்

(D) Rs. 2.5 Lakhs
ரூ. 2.5 இலட்சம்

86. What is the rate of employee's contribution deducted per month from the Government employees under the Family Security Fund Scheme?
குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் பணியாளர் சந்தாவாக அரசுப் பணியாளரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை எவ்வளவு?

(A) Rs. 50/-
ரூ. 50/-

(B) Rs. 110/-
ரூ. 110/-

(C) Rs. 30/-
ரூ. 30/-

(D) Rs. 150/-
ரூ. 150/-

87. State the amount of advance under the Family Security Fund scheme for meeting the immediate requirement of Government Servant who die while in service
குடும்ப நல பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் அரசு பணியாளர் பணியிலிருக்கும் போது இறந்தால் உடனடி தேவைகளை செய்ய வழங்கப்படும் முன்பணத் தொகையைக் குறிப்பிடுக

(A) Rs. 5,000/-

(B) Rs. 10,000/-

(C) Rs. 15,000/-

(D) Rs. 25,000/-

88. Any Temporary post which is in extension for more than _________ years shall be treated as a permanent post under rule 6 of the General Rule for Tamilnadu State and Sub-ordinate Service.
தமிழ்நாடு சார்நிலைப் பணி விதிகள் விதி எண். 6ன் படி _________ ஆண்டுகளுக்கு மேற்பட்டு தொடர்ந்து இருக்கக்கூடிய தற்காலிகப் பணியிடங்கள், நிரந்தர பணியிடங்களாக கருதப்படும்

(A) 3

(B) 2

(C) 5

(D) 6

89. Mention the increments allowed to the Government employee who are appointed on compassionate Ground appointed but not yet regularized due to relaxation of Rules
கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளருக்கு விதித் தளர்வு காரணமாக பணிவரன்முறை செய்யப்படாத நிலையில் எத்தனை ஊதிய உயர்வுகள் வழங்கலாமென்பதைக் குறிப்பிடுக.

(A) 2 increments
2 ஊதிய உயர்வுகள்

(B) 3 increments
3 ஊதிய உயர்வுகள்

(C) Increments may be allowed Continuously
தொடர்ந்து ஊதிய உயர்வுகள் வழங்கலாம்

(D) 1 increment
ஒரு ஊதிய உயர்வு

90. During suspension, Court Recovery made from substance allowance is
தற்காலிக பணி நீக்க காலத்தில், பிழைப்பூதியத்தில் நிதிமன்ற பிடித்தம் என்பது

(A) Compulsory Recovery
கட்டாய பிடித்தம்

(B) Optional Recovery
விருப்பமான பிடித்தம்

(C) Not to be Recovered
பிடித்தம் செய்யக்கூடாது

(D) (A) or (B)
(A) அல்லது (B)

91. What will be the amount to be paid incase of death of pensioner under TamilNadu Government Pensioner's Family Security Scheme?
தமிழ்நாடு அரசு ஓய்வூதியரின் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ஓய்வூதியர் இறந்தால் வழங்கும் தொகை எவ்வளவு?

(A) Rs. 25,000/-

(B) Rs. 50,000/-

(C) Rs. 1,00,000/-

(D) Rs. 35,000/-

92. The Cash incentive to the government Employees who have rendered 25 years of unblemished service is
25 ஆண்டுகள் மாசற்ற பணி புரிந்தவர்களுக்கு அரசால் வழங்கப்படும் ஊக்கத் தொகை

(A) Rs. 1000/-
ரூ. 1000/-

(B) Rs. 2500/-
ரூ. 2500/-

(C) Rs. 2000/-
ரூ. 2000/-

(D) Rs. 5000/-
ரூ. 5000/-

93. lapsed Deposits taken as receipt after
காலாவதியான வைப்புத் தொகை இதற்கு பிறகு வரவாக்கப்படுகிறது

(A) 9 Years
9 ஆண்டுகள்

(B) 6 Years
6 ஆண்டுகள்

(C) 3 Years
3 ஆண்டுகள்

(D) 1 Year
1 ஆண்டு

94. Mention the No of installments to be recovered the amount paid as Pay Advance on Transfer
பணியிட மாறுதலின்போது வழங்கப்படும் ஊதிய முன்பணம் பிடித்தம் செய்யப்படும் தவணைகளைக் குறிப்பிடு

(A) 3

(B) 2

(C) 6

(D) 10

95. What will be the time limit to purchase the vehicle after getting the loan from GPF?
வாகனம் வாங்க பொது சேமநல நிதியிலிருந்து கடன் பெற்றால், தொகை பெற்றதிலிருந்து எந்த கால அளவுக்குள் வாகனம் வாங்க வேண்டும்?

(A) 3 Months
3 மாதங்கள்

(B) 1 Month
ஒரு மாதம்

(C) 6 Months
6 மாதங்கள்

(D) 60 days
60 நாட்கள்

96. Mention the time limit to insure after the purchase of vehicle under vehicle advance
வாகன முன்பணம் பெற்று வாங்கிய வாகனத்திற்கு வாங்கியதிலிருந்து எந்த கால அளவிற்குள் காப்பீடு செய்யப்பட வேண்டும்

(A) 2 Months
2 மாதங்கள்

(B) 6 Months
6 மாதங்கள்

(C) 3 Months
3 மாதங்கள்

(D) 1 Month
1 மாதம்

97. State the minimum percentage of disability in the upper/lower part of the body to get the Transport Allowance by the physically Handicapped
உடல் ஊனமுற்றோருக்கு போக்குவரத்துப்படி பெற உடலின் மேல் / கீழ்ப் பகுதியில் உடல் ஊனம் எத்தனை சதவீதத்திற்குள் இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பிடுக.

(A) 50%
(B) 60%
(C) 40%
(D) 75%

98. Mention the time limit to claim the proceedings from the date of sanction of the proceeding
ஒப்பளிக்கப்பட்ட செயல் முறை ஆணைக்கான தொகை கோருவது, ஒப்பளிக்கப்பட்ட நாளிலிருந்து எந்தக் கால அளவிற்குள் கோரலாமென்பதைக் குறிப்பிடுக.

(A) 2 years
2 ஆண்டுகள்
(B) 6 years
6 ஆண்டுகள்
(C) 1 year
1 ஆண்டு
(D) 60 days
60 நாட்கள்

99. State the Quantity of carry home salary to be allowed on basic pay
வீட்டிற்கு கொண்டு செல்லும் ஊதியம் என்பது அடிப்படை ஊதியத்தில் எத்தனை பங்கு இருக்க வேண்டுமென்பதை தெரிவிக்கவும்

(A) 1/2
(B) 1/4
(C) 1/3
(D) 2/3

100. What will be time limit to remit the Treasury chalans after getting the signature of the Head of Office?
அலுவலகத் தலைவரால் ஒப்பமிடப்பட்ட கருவூலகச் செலுத்துச்சீட்டுத் தொகையினை எத்தனை நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்?

(A) 10 days
10 நாட்கள்
(B) 12 days
12 நாட்கள்
(C) 15 days
15 நாட்கள்
(D) 14 days
14 நாட்கள்